**இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) 2016**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஏனைய விரிவான வருமான கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பன 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் நாணய அதிகாரச்சட்டத்தின் 42(2) ஆம் பிரிவுடன் (422 ஆம் அத்தியாயம்) ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இக் கணக்காய்வை மேற்கொள்கையில், சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களுடனான இணங்கியொழுகுதலை பரீட்சிப்பதற்காக பொதுத் தொழிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் எனக்கு உதவியளிக்கப்பட்டது.

வங்கியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்) இணங்க மேற்படி நிதிக்கூற்றுக்கள் அனைத்துப் பொருண்மையான விடயங்களையும் நியாயமாக பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்ஏ) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையிலுள்ள நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பந்தியில் அந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் மேலும் விபரிக்கப்படுகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட ஒழுக்கநெறிக் கோவைக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வுடன் தொடர்புடைய ஒழுக்கநெறி தேவைப்பாடுகளிற்கு அமைய நான் வங்கியின் செயற்பாடுகளிலிருந்து சுயாதீனமானவனாக உள்ளேன் என்பதுடன் இத் தேவைப்பாடுகளிற்கு இணங்கஎனது ஏனைய ஒழுக்கநெறிப் பொறுப்புக்களையும் நான் நிறைவேற்றியுள்ளேன். எனதுகணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நாணயச் சபையின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை சர்வதேச நிதிசார் அறிக்கையிடல் நியமங்களிற்கு (ஐஎவ்ஆர்எஸ்) இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நாணயச் சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு வங்கியின் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையை தொடருவதற்கான இயலுமையினை வெளிப்படுத்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய பிரயோகித்தக்க விடயங்கள் என்பவற்றை மதிப்பாய்வு செய்வதற்கும் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருக் கணக்கீட்டு அடிப்படையினைப் பயன்படுத்துவதற்கும் நாணயச் சபை பொறுப்பாக உள்ளது.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், சர்வதேச கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

சர்வதேச கணக்காய்வு நியமங்களின் (ISA) பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பிடுதல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்தல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் மற்றும் ஏனைய உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால், மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக் கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பிடுதல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நாணயச் சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும், பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. இருப்பினும், எதிர்கால நிகழ்வுகளும் நிலைமைகளும் வங்கியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடை நிறுத்துவதற்கு காரணங்களாக அமைய முடியும்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பிடுதல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட ஏனைய விடயங்களான கணக்காய்வின் திட்டமிடப்பட்ட நோக்கெல்லையும் காலமும் மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டிலுள்ள எவையேனும் முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கலாக முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பில் நாணயச் சபையுடன் நான் தொடர்பாடுகின்றேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 பொதுத் திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறப்பட வேண்டியவை

நாணய அதிகாரச்சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு நிலுவையிலுள்ள மீதியும் இலாபத்தினை மாற்றுவதற்கு முன்னர் அறவிடப்படுதல் வேண்டும். மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பொதுத் திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,401,497,319 ஆகக் காணப்பட்ட போதிலும், 2016 இன் இலாபப் பகிர்விலிருந்து ரூபா 1,378,272,467 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

### 2.2 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) நாணய அதிகாரச்சட்டத்தின் 39 ஆம் பிரிவு | இப் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் படி, பகிர்வுகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் செலுத்த வேண்டியவைகளை தீர்த்ததன் பின்னர் வங்கியினால் உழைக்கப்பட்ட இலாபங்கள், ஒவ்வொரு நிதியாண்டும் முடிவுற்று ஆறுபது நாட்கள் கடந்து செல்வதற்கு முன்னர் பொதுத் திறைசேரிக்கு மாற்றப்படுதல் வேண்டும். இருப்பினும், இந்த ஏற்பாட்டிற்கு முரணாக வங்கியினது இலாபத்தின் முற்பணக் கொடுப்பனவாக 2016 திசெம்பர் 30 ஆந் திகதியன்று ரூபா 5 பில்லியன் பொதுத் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.<br><br>இது தொடர்பில் வங்கியின் நாணயச் சபைச் செயலாளரினால் பின்வருமாறு எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>"சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) கீழ் நிதி இலக்குகளை அடைந்துகொள்ளும் அரசாங்கத்தின் தேவைக்காக விசேட அடிப்படையில் மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ரூபா 5 பில்லியன் இலாபத்தினை முற்பணமாக மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது" |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வங்கி தனது ஊழியர்களிடமிருந்து அறவிடுவதற்குப் பதிலாக அதன் சொந்த நிதிகளிலிருந்து மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக முறையே ரூபா 363 மில்லியன் மற்றும் ரூபா 322.6 மில்லியன் கூட்டுத்தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி (பிஏவைஈ) மற்றும் வரி மீதான வரி என்பவற்றைச் செலுத்தியிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

--------------------------------

### 3.1 நிதிசார் விளைவுகள்

------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான வங்கியின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் வரிக்கு முந்திய ரூபா 17,814 மில்லியன் தேறிய நட்டத்திற்கு எதிராக ரூபா 24,014 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபத்தை விளைந்திருந்தமையால், நிதிசார் விளைவுகளில் ரூபா 41,828 மில்லியன் முன்னேற்றம் காட்டப்பட்டது. விசேடமாக தங்கம், பொரக்ஸ் இன் விலை மீள்மத்திப்பீட்டிலிருந்தான நயம் மற்றும் எஸ்டபிள்யூஏபிஎஸ் நாணயம் என்பன முறையே ரூபா 25,612 மில்லியன் மற்றும் ரூபா 17,285 மில்லியன் தொகையால் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த முன்னேற்றத்திற்கு பங்களித்த பிரதான காரணங்களாகும்.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

-----------------------------------------------------------

முன்னைய ஆண்டின் ரூபா 6.2 பில்லியன் தொகையான (ரூபா 10.6 பில்லியன் தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நயம் உள்ளடங்கலாக) மொத்த தேறிய செயற்பாட்டு நட்டத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாடிற்கான வங்கியின் மொத்த தேறிய செயற்பாட்டு வருமானம் ரூபா 6.8 பில்லியன் தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நட்டம் உள்ளடங்கலாக ரூபா 36 பில்லியனாக காணப்பட்டமையால், மொத்த தேறிய செயற்பாட்டு வருமானத்தில் 681 சதவீத முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. அதேவேளை, முன்னைய ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் காலக்கழிவு செலவினம் என்பவற்றை உள்ளடக்கிய செயற்பாட்டுச் செலவினமான ரூபா 11.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அது ரூபா 11.9 பில்லியனாக இருந்தமையால் செயற்பாட்டுச் செலவினத்தில் 2.6 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் இலங்கை மத்திய வங்கியின் வருமானம் மற்றும் செலவின முரண்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு கீழே காட்டப்படுகின்றன.

| | 2016 | 2015 | முரண் {சாதகம்/(பாதகம்)} | |
|---|---|---|---|---|
| | ரூபா பில். | ரூபா பில். | ரூபா பில். | சதவீதம் |
| **அந்நியச் செலாவணி நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம்** | **26.4** | **(15.1)** | **41.5** | **274.83** |
| வட்டி வருமானம் | 14.9 | 13 | 1.9 | 14.62 |
| தேறாத விலை மீள்மதிப்பீடுகளிலிருந்தான நயம்/ (நட்டம்) | 9.7 | (34.8) | 44.5 | 127.87 |
| தேறிய விலை மாற்றங்களிலிருந்தான நயம் | 1.8 | 6.7 | (4.9) | (73.13) |
| **அந்நியச் செலாவணி நிதிப் பொறுப்புக்கள் மீதான செலவினம்** | **3.9** | **3.6** | **(0.3)** | **(8.33)** |
| வட்டிச் செலவினம் | 3.9 | 3.6 | (0.3) | (8.33) |
| **தேறிய அந்நியச் செலாவணி மீள்மதிப்பீட்டு நயம்/ (நட்டம்)** | **(6.8)** | **10.6** | **(17.4)** | **(164.15)** |
| **உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான மொத்தத் தேறிய வருமானம்/ (செலவினம்)** | **18.8** | **0.4** | **18.4** | **4600** |
| ஏனைய வருமானம் | 1.5 | 1.6 | (0.1) | (6.25) |
| செயற்பாட்டுச் செலவினம் | 12 | 11.6 | (0.4) | (3.45) |
| பிடித்துவைத்த வரி | 1.8 | 1.8 | 0 | 0 |
| **வரிக்குப் பின்னர் ஆண்டிற்கான தேறிய இலாபம் / (நட்டம்)** | **22.2** | **(19.6)** | **41.8** | **213.26** |

அந்நியச் செலாவணி நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 274.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க பிணைகள் மீதான வட்டி வருமானம் அதிகரித்தும் மறு கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணைகள் மீதான வட்டிச் செலவினம் குறைவடைந்தும் காணப்பட்டமையால் உள்நாட்டு நாணய நிதிச் சொத்துக்களிலிருந்தான வருமானம் 4600 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருந்தமையின் விளைவாக மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபத்தில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் கட்டிடங்களை வாடகைக்கு விடுதல்

நாணயச்சட்டத்தின் 117 ஆம் பிரிவின் பிரகாரம், வங்கி ஆனது அதன் கோரிக்கைகளில் எவற்றையேனும் திருப்திப்படுத்துவதற்கான அவ்வாறான ஆர்வம் தவிர்ந்த எந்தவொரு வியாபாரத்தில் அல்லது நேரடியாக ஆர்வம் கொண்ட வர்த்தக, கைத்தொழில் அல்லது வேறு கையேற்றலில் ஈடுபடாதிருத்தல் வேண்டும்''. இந்த ஏற்பாட்டுக்கு முரணாக சீபீஸ்எல் இற்குச் சொந்தமான பின்வரும் கட்டிடங்கள் குறித்துரைத்த நோக்கங்களிற்காக பயன்படுத்திக் கொள்ளப்படாது வெளித் தரப்பினர்களிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் ரூபா 426,582,639 வாடகை வருமானத்தை வங்கி ஈட்டியிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| ஆதனத்தின் பெயர் | வாடகைக்கு விடப்பட்ட காலம் | வெளித்தரப்பினரின் பெயர் | மாதாந்த வாடகை |
|---|---|---|---|
| மத்திய புள்ளிக் கட்டிடம் (கீழ் மாடியின் ஒரு பகுதி, 2 மற்றும் 3 ஆவது மாடிகள்) | 2015 நவம்பர் 27 முதல் 2016 நவம்பர் 26 வரை | நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு - ஸ்ரீ லங்கா பொலிஸ் | ரூபா 2,600,000 |
| வங்கியின் தலைமை அலுவலகம் ( 4 மற்றும் 5 ஆம் கோபுரத்தின் 12 ஆவது மட்டம்) | 2016 நவம்பர் 28 முதல் 2018 நவம்பர் 27 வரை | ஈபீஎவ் திணைக்களம் | ரூபா 1,654,000 |
| வங்கியின் தலைமை அலுவலகம் ( 3 மற்றும் 5 ஆம் கோபுரத்தின் 5 ஆவது மட்டம் மற்றும் 1 ஆம் கோபுரத்தின் 1 ஆம் மட்டம்) | 2016 சனவரி 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை | ஈபீஎவ் திணைக்களம் | ரூபா 3,213,860 |
| லியோட் கட்டிடம் | 2016 சனவரி 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை | ஈபீஎவ் திணைக்களம் | ரூபா 6,752,500 |
| சென்ரல் பொயின்ட் கட்டிடம் (4 மற்றும் 5 ஆவது மாடிகள்) | 2016 பெப்ரவரி 01 முதல் 2017 நவம்பர் 30 வரை | சீஎச்ஈசீ போர்ட் சிரி கொழும்பு (தனியார்) கம்பனி | ரூபா 5,187,538 (1 ஆம் ஆண்டு) ரூபா 5,537,373 (2 ஆம் ஆண்டு) |
| வங்கியின் தலைமை அலுவலகம் (5 ஆம் கோபுரத்தின் 15 மற்றும் 16 ஆவது மட்டம்) | 2016 திசெம்பர் 01 முதல் 2018 நவம்பர் 30 வரை | செயற்திட்ட முகாமைத்துவ கண்காணிப்புத் திணைக்களம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | ரூபா 2,141,480 |
| வங்கி கற்கைகளிற்கான நிலையம், ராஜகிரிய – விடுதித் தொகுதி | 2016 யூலை 01 முதல் 2017 யூன் 30 வரை | விசேட அதிரடிப் படை - ஸ்ரீ லங்கா | ரூபா 220,000 |

| | | | |
|---|---|---|---|
| அநுராதபுரம் பிராந்திய அலுவலகத்தின் ஒரு பகுதி | 2016 செப்தெம்பர் 03 முதல் 2017 மார்ச் 02 வரை | ஏபீ செகியுரிடீஸ் (தனியார்) கம்பனி | ரூபா 230,000 |
| ''வைட்எவேய்ஸ்'' கட்டிடம் 2 ஆம் மாடி | 2015 நவம்பர் 01 முதல் 2018 ஒக்தோபர் 31 வரை | சட்ட ஒழுங்குகள் மற்றுறம் தெற்கு அபிவிருத்தி அமைச்சு | ரூபா 2,070,000 |
| ''வைட்எவேய்ஸ்'' கட்டிடம் கீழ் மாடி | 2015 நவம்பர் 01 முதல் 2018 ஒக்தோபர் 31 வரை | கடன் தகவல் நிலையம் | ரூபா 4,140,000 |
| மாத்தறை பிராந்திய அலுவலகத்தின் ஒரு பகுதி | 2014 செப்தெம்பர் 15 முதல் 2017 செப்தெம்பர் 14 வரை | ஏபீ செகியுரிடீஸ் (தனியார்) கம்பனி | ரூபா 265,816 |
| பிறேசீல் இலுள்ள ஆதனம் | 2015 பெப்ரவரி 01 முதல் 2017 சனவரி 31 வரை | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | யூஎஸ்எஸ் 9,000 |
| ஐக்கிய அமெரிக்க நிவ்யோர்க் இலுள்ள ஆதனம் | 2015 யூன் 01 முதல் 2017 மே 31 வரை | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | யூஎஸ்எஸ் 68,000 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பிறேசில் மற்றும் நிவ்யோர்க் இலுள்ள ஆதனங்களின் உரிமையினை அவற்றின் சந்தைப் பெறுமதியில் அரசாங்கத்திற்கு கைமாற்றுவதற்கு 2016 மே 10 ஆநி திகதி வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. வங்கியினால் குறித்த ஆதனங்களிற்கு செய்யப்பட்டிருந்த ரூபா 734.3 மில்லியன் உண்மையான கிரயத்தில் ஆதனங்களை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக 2016 நவம்பர் 23 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இருப்பினும், 2017 செப்தெம்பர் மாதம் இறுதி வரையிலும் இந்த ஆதனங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு மாற்றப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ii) தாமதக் கட்டணம் தொடர்பான நிபந்தனையினை உடன்படிக்கையில் உள்ளடக்குவதற்கு வங்கி தவறியிருந்தது. அதன்காரணமாக, வாடகையினை உரிய வேளையில் அறவிடுவதற்கு வங்கிக்கு முடிந்திருக்கவில்லை. சில மாதங்களிற்கான வாடகை 104 முதல் 254 நாட்கள் வரையிலான வீச்சிலமைந்த குறிப்பிடத்தக்க தாமதத்துடன் கிடைத்திருந்தமை தெரிவுச் செவ்வையில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஆலோசனை மன்றத்திற்கான மதியுரைச் சேவைக் கிரயம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வசித்து காணாமல் போனோர் தொடர்பில் கிடைத்திருந்த முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான சனாதிபதி ஆணைக்குழுவிற்கு உதவுவதற்காக ஆலோசனை மன்றம் என்ற வகையில் மூன்று சர்வதேச நிபுணர்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் சனாதிபதி 2014 யூன் 28 ஆந் திகதி நியமித்திருந்ததுடன் இவ்விடயம் 2014 யூலை 15 ஆந் திகதிய 1871/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. மேற்படி ஆலோசனை மன்றத்தினதும் அவர்களது பதவியணியினதும் 2015 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான முறையே ரூபா 140.6

மில்லியன் மற்றும் ரூபா 116.8 மில்லியன் தொகையான மதியுரைக் கட்டணங்கள், வதிவிட மற்றும் ஏனைய கட்டணங்கள் போன்ற செலவினங்கள் எவ்வித மீள்நிரப்புவதற்கான அடிப்படையுமின்றி வங்கியினால் செய்யப்பட்டிருந்தன. அத்துடன், ரூபா 21 மில்லியன் தொகையான மதியுரைக் கட்டணமொன்று 2016 இல் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி செலவினங்கள் எவ்வித மீள்நிரப்புவதற்கான அடிப்படையுமின்றி வங்கியினால் செய்யப்பட்டிருந்த போதிலும், மேலே குறிப்பிட்ட மதியுரைஞர்களிற்கும் வங்கிக்குமிடையே எவ்வித உடன்படிக்கையும் காணப்படவில்லை. மேலும், மதியுரைஞர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் வங்கியின் குறிக்கோள்களுக்கு முரணாக காணப்பட்டன.

மதியுரைஞர்களால் அரசாங்கத்திற்கு வழங்கிய சேவைகளிற்காக 2016 ஆகஸ்ட் 16 முதல் வங்கியினால் மதியுரைஞர்களிற்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை திரட்டு நிதியத்திற்கு மாற்றப்படுவதற்குள்ள இலாபங்களிலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு 2016 நவம்பர் 01 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது

(இ) மதியுரைச் சேவைக்கான கொடுப்பனவுகள்

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் 06 மாத காலத்திற்காக மதியுரைஞர் ஒருவரின் சேவையினை பெற்றுக்கொள்வதற்கான 24/2015 ஆம் இலக்க அங்கீகாரம் 2015 ஒக்தோபர் 05 ஆந் திகதி இடம்பெற்ற நாணயச் சபைக் கூட்டத்தில் வழங்கப்பட்டிருந்தது. வங்கிக்கு பிரயோகிக்கக்கூடிய தொடர்புடைய சட்ட ஏற்பாடுகளை முன்மொழியப்பட்டுள்ள புதிய அரசியலமைப்பு உள்ளடக்குகின்றமையினை உறுதிப்படுத்திக் கொள்வதே இச் சேவையினை பெற்றுக்கொள்வதன் நோக்கமாக காணப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக மேற்படி மதியுரைஞருக்குச் செலுத்தியிருந்த முறையே ரூபா 3.2 மில்லியனக் மற்றும் ரூபா 0.8 மில்லியன் கைச்செலவினம், வதிவிடம், உணவு மற்றும் நாடுதிரும்புவதற்கான விமானக் கட்டணம் என்பன வங்கியின் செலவினமாக கருதப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மேற்படி மதியுரைஞரின் மதியுரை வேலைகள் வங்கியின் செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புபட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய, மதியுரைஞரால் அரசாங்கத்திற்கு வழங்கிய சேவைகளிற்காக 2016 ஆகஸ்ட் 16 முதல் வங்கியினால் மதியுரைஞருக்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளை திரட்டு நிதியத்திற்கு மாற்றப்படுவதற்குள்ள இலாபத்திற்கு எதிராக எதிரீடு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி திகதிக்குப் பின்னர் மதியுரைஞருக்குச் செலுத்தியிருந்த ரூபா 2.3 மில்லியன் மற்றும் ரூபா 1.8 மில்லியன் தொகைகள் முறையே வங்கியின் செலவினமாகவும் திறைசேரி மற்றும் ஏனைய அமைச்சுக்களிலிருந்து பெறப்பட வேண்டியவையாகவும் கருதப்பட்டிருந்தன.

(ஈ) பொருத்தமற்ற நடைமுறைகள்

வங்கி அதன் நிதிகளை முதலாந்தர வணிகருடன் வர்த்தகம் செய்யக்கூடிய பின்னோக்கிய மீள்கொள்வனவு (tradable reverse repo) முதலீடுகளில் முதலீடு செய்திருந்தது. மீளெடுக்கப்பட்ட பிணையங்கள் தொடர்பில் எவ்வித பிணைகளையும் மீண்டும் ஒப்படைக்காது குறித்த பிணையங்கள் முதலாந்தர வணிகரால் மீளெடுக்கப்பட்டமை காரணமாக இந்த முதலீடுகள் தொடர்பில் லங்கா சிகியுரிடி சிஸ்ரம் (Lanka Security System) பூச்சிய மீதியினைக் காண்பித்தது. 2015 திசெம்பர் 04 எடுக்கப்பட்ட நாணயச் சபைத் தீர்மானத்தின் பிரகாரம், மிணைமுறியின்றி மேற்படி முதலீட்டினை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்திருந்தது. 2017 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு இந்த முதலாந்தர வணிகருடன் இலங்கை மத்திய வங்கியின் நிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்த பிணைமுறியற்ற முதலீட்டு நிலுவைகள்

மற்றும் குறித்த முதலாந்நதர வணிகருடன் வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்பட்ட நிதிகள் என்பன ரூபா 2.4 பில்லியனாக காணப்பட்டது.
2012 திசெம்பர் 10 மற்றும் 2012 திசெம்பர் 14 ஆம் திகதிகளில் முன்னர் மேற்கொண்டிருந்த பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த குறித்த வணிகரின் வரம்பு மீறுதல்கள் தொடர்பில் (சில வாடிக்கையாளர்களிற்கு போதியளவு பிணையங்களை ஒதுக்கியிருக்காமை மற்றும் ஐஎல்எவ் வசதியினை பெற்றுக்கொள்வதற்காக வாடிக்கையாளர் பிணையங்களை பயன்படுத்தியிருந்தமை) 2013 யூன் 06 ஆந் திகதி பல எச்சரிக்கை கடிதங்களையும் நெறிப்படுத்தலையும் சீபீஎஸ்எல் வழங்கியிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. இந்த வணிகரினால் புரியப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் வங்கியினால் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை காரணமாக இதனையொத்த முறையற்ற செயற்பாடுகள் 2015 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவ்வாறே, இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்புப் பிரிவினால் 2015 மே 20 மற்றும் 2015 மே 21 ஆந் திகதிகளில் இந்த முதலாந்தர வணிகர் தொடர்பில் 2015 மார்ச் 31 இல் உள்ளவாறு களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற்படி வரம்பு மீறுதல்கள் உள்ளடங்கலாக பல்வேறு பிரமாணங்கள் மற்றும் பணிப்புரைகள் மீறப்பட்டிருந்தமை இக் களப்பரிசோதனையில் அவதானிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, 2017 சனவரி 30 ஆந் திகதிய 3/2017 ஆம் இலக்க நாணயச் சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைய, இது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் குறித்த முதலாந்தர வணிகருடனான வங்கியின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணையினை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை ஆளுநர் நியமித்திருந்தார். சில சந்தர்ப்பங்களில் அறிக்கை வழங்குகின்ற சகல மட்டங்களிலும் தொடர்ச்சியாகவே பொருண்மையான முதலீட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என குழு முடிவுசெய்திருந்தது.

குழுவினால் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- ஒவ்வொரு கம்பனிகள், தொடர்புடைய தரப்பினர்கள் மற்றும் முகாமைத்துவத்தின் அறிக்கைகளிலுள்ள ஆபத்து தொடர்டபில் அவ்வளவு கவனம் செலுத்தாது முதலாந்தர வணிகர்களின் (பீடீ) சகல பரிசோதனைகளிற்குமான கண்காணித்தல் வழிகாட்டியினை மேற்பார்வையாளர்கள் ஒரே விதத்தில் பின்பற்றியிருந்தமை.

- சகல பீடீ களினாலும் ஒத்த தவறுகள் மீண்டும் மீண்டும் புரியப்பட்டும் அவ்வாறே ஒரு தவறு அதே பீடீ இனால் மீண்டும் மீண்டும் புரியப்படுமிருந்த போதிலும், இது முறைமைக்கு பாரிய அச்சுறுத்தல் என்பதனை அனைத்து பொதுப் படுகடன் திணைக்களம் கருத்திற்கொண்டிருக்காமை.
- பிரமாண மற்றும் மேற்பார்வை விடயங்கள் மீண்டும் மீண்டும் இடம்பெற்றிருந்த போதிலும், அவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்களவான நட்டத்தினையும் ஆபத்தினையும் ஏற்படுத்தும் என்தனை மதிப்பீடு செய்திருக்காமை.

- மத்திய வைப்பக முறைமையில் (சீடீஎஸ்) முதலீடுகளை பதிவு செய்கையில் தொடர்ச்சியாக குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன. இருப்பினும், திருத்தும் நடவடிக்கைகள் மிகவும் குறைந்த அளவிலேயே இடம்பெற்றிருந்ததுடன் ஏற்படும் கிரயங்கள் மற்றும் சேவை வழங்குனருடன் தொடர்புகொள்ளும் சிக்கல்கள் போன்ற பல்வேறு காரணங்களால் அரசாங்கப் பிணைகள் சந்தையில் இடம்பெற்றிருந்த ஏனைய அபிவிருத்திகளுடன் ஒப்பிடுகையில் இது எதிர்பார்க்கப்பட்ட அளவில் காணப்படாமை.

- தடங்கலற்ற பிணைகள் தீர்வையக முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், ''சென்ரல் கவுன்டபார்ட்'' போன்ற புதிய அபிவிருத்திகளுடன் பொருந்துகின்ற தேவையான ஏனைய கட்டுப்பாடுகள்/ அறிக்கையிடுதல்கள் என்பன புதிய ஆபத்துக்களை குறைப்பதற்காக போதியளவில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காமை.

- சாத்தியமான ஆபத்துக்கள், வெளிக்காட்டும் பிரதான ரெபோ உடன்படிக்கைகளின் (எம்ஆர்ஏ) தேவை, எம்ஆர்ஏ இன் உள்ளடக்கங்கள் மற்றும் தொடர்ச்சியான பின்தொடரல்கள் மற்றும் பிணைகளின் வியாபாரம் செய்யக்கூடிய தன்மை என்பன தொடர்பில் முதலீட்டாளர்களை அறிவுறுத்துவதற்காக போதியளவு முதலீட்டாளர் வழிப்புணர்வூட்டல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை.

- இனங்காணப்பட்ட மேற்பார்வையுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் திருத்தும் நடவடிக்கைகளை உள்ளடக்கிய விசாரணை அறிக்கைகள் பொதுப்படுகடன் திணைக்களத்தின் பின்தொடர் நடவடிக்கைகளுடன் இணைத்து முகாமைத்துவத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை.

- மனோபாவனை காரணமாக, அரசாங்க பிணைகள் இலாபகரமான கருவிகளாக இருப்பதுடன் முதலாந்தர வணிகர்கள் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு, அனைத்து திணைக்கள உள்ளக முதலீட்டுக் குழுக்களும் முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்கையில் உயர்வான திரும்பல் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துகின்றமை.

- காணப்பட்ட ஆபத்துக்கள் மீது போதியளவு கவனம் செலுத்தாது முதலாந்தர வணிகர்களால் வழங்கப்பட்டிருந்த வட்டி வீதங்கள், மாதாந்த முதலீட்டு மேற்பார்வைக் குழுவின் கூட்டங்களில் கருத்திலெடுக்கப்பட்டிருந்தமை.

- இதனையே தொர்ந்தும் பின்பற்றுமாறு உயர் முகாமைத்துவத்தினால் சில திணைக்களங்களிற்கு வழிகாட்டப்பட்டப்பட்டிருந்தன.

- முதலீடுகளின் ஒட்டுமொத்த ஆபத்தினை மதிப்பிடுதல் ஐஓசீ/ஐஐசீ இன் பொறுப்பாக காணப்பட்ட போதிலும் அது அவ்வாறு இடம்பெற்றிருக்காமை.

- ஒவ்வொரு திணைக்களத்தினதும் ஐஐசீன் இன் அங்கத்தவர்கள் அல்லது ஐஓசீ இன் அங்கத்தவர்கள், அவர்களது முதலீடுகளின் ஆரம்பக் கட்டங்களில் பிணைகளை ஒதுக்கீடு செய்வது தொடர்பில் சீடீஎஸ் இன் அறிக்கைகள் ஒல்லது ஒழுங்குவிதிகளை கருத்திற்கொண்டிருப்பின் நட்டத்தினைக் குறைப்பதற்கு முடிந்திருக்கும்.

- உள்ளகக் கணக்காய்வில் 2015 இன் நிகழ்வுக்கு முன்னர் அவ்வாறான குறைபாடுகள் இனங்காணப்பட்டிருக்காமை.

- தொர்புடைய பதவியணியினர் நிதி முகாமைத்துவம் தொடர்பில் போதியளவு/பொருத்தமான பயிற்சிகளை பெற்றிருக்காமை.

(உ) கடன் அட்டை செலவினத்தை தீர்த்தல்

முற்பணக் கொடுப்பனவுகள் தொடர்பில் சீபீஎஸ்எல் இன் நிதித் திணைக்களத்தினால் 2011 ஏப்ரல் 19 ஆந் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், பெறப்பட்ட முற்பணங்களை தீர்ப்பதற்காக மூலக் கிரயப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேற்படி சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக சீபீஎஸ்எல் இன் முன்னாள் ஆளுனரினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டிருந்த முறையே ரூபா 4,354,092 மற்றும் ரூபா 1,537,355 தொகைக்கான மூலக் கிரயப்பட்டியல்கள் அவரால் எடுக்கப்பட்டிருந்த முற்பணங்களை தீர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

அத்துடன், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் முன்னாள் ஆளுனரின் உத்தியோகபூர்வ கடன் அட்டை மூலம் செலுத்தப்பட்டிருந்த முறையே ரூபா 4,238,853 மற்றும் ரூபா 6,564,359 தொகைக்குரிய தனிப்பட்ட செலவினங்களை சீபீஎஸ்எல் செலுத்தியிருந்தது. மேற்படி செலவினங்கள் குறிப்பிடத்தக்க தாமதத்தின் பின்னர் மீளளிக்கப்பட்டிருந்தன.

## 3.4 இலங்கையின் பொதுப்படுகடனை முகாமைத்துவம் செய்வதற்கான முகவர் தொழிற்பாடு

நாட்டின் பொருளாதார மற்றும் விலை உறுதியினையும் நிதி முறைமையின் உறுதியினையும் உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கி (சீபீஎஸ்எல்) தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொதுப்படுகடன் முகாமைத்துவ முகவர் தொழிற்பாட்டிற்கு சீபீஎஸ்எல் பொறுப்பாகவுள்ளது. அரசாங்கத்திற்கான காசுத் தேவைகளை அரசாங்கத்திற்கு ஆகக்குறைந்த கிரயத்தில் நிறைவேற்றுவதற்காக திறைசேரி பிணைகளை வழங்குவதற்கான தனிப்பட்ட பொறுப்பினை அது கொண்டுள்ளது.

2015 பெப்ரவரி முதல் 2016 மே வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பிலான விசேட கணக்காய்வு அறிக்கையொன்று 2016 யூன் 29 ஆந் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ சபாநாயகர் அவர்களிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விசேட கணக்காய்வு அறிக்கையிலுள்ள அவதானிப்புக்கள் இந்த அறிக்கையின் அவதானிப்புக்களாக கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரின் கவனத்திற்கு காலத்திற்கு காலம் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றன.

| விடயப்பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வங்கியல்லாத நிதி நிறுவனங்களின் கண்காணிப்பு | - முதலாந்தர வணிகர் ஒருவரினால் விதிகள் மீறப்பட்டிருத்தல் |
| (ஆ) செலுத்துகைகள் | - மீள்நிரப்புவதற்கான ஏற்பாடுகளின்றி வெளிநாட்டு சட்டத்தரணிகள் மற்றும் மதியுரைஞர்களிற்கான செலுத்துகைகள் |
| (இ) முற்பணங்களை தீர்த்தல் | - மூல கிரயப்பட்டியல்களின்றி முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருத்தல் |